WORKERS' ACTION CENTRE

# வீட்டுப் பணியாளர்களிற்கான புதிய சட்டப் பாதுகாப்பு.

உங்கள் உரிமைகளைத் தெரிந்துகொள்ளுங்கள் ! என்னும் தொடர

வீட்டுப் பணியாளர்களிற்கான புதிய சட்டப் பாதுகாப்பு மார்ச் 22, 2010 இலிருந்து அமுலுக்கு வந்துள்ளது,

**மத்திய அரசாங்கத்தின் வீட்டுப் பணியாளர்களிற்கான விசேட திட்த்தினூடாக கனடாவில் வீட்டுப் பணியாளர்களாக வேலைசெய்யும் உழியர்கள் அந்த தொழிலைப் பெற்றுக் கொடுப்பதற்காக முகவர்கள்(ஏஜென்சி) மற்றும் முதலாளிமார் அதற்காக குறிப்பிட்ட கட்டணம் அறவிடுவதாக முறையிட்டிருந்தார்கள். சில வீட்டுப் பணியாளர்களின் கடவுச் சீட்டுகள் அல்லது அவர்களது சில சொந்தச் சொத்துக்களை இந்த முதலாளிமார் அல்லது ஏஜென்சி இந்த வீட்டுப் பணியார்களிடம் இருந்து பறிமுதல் செய்து வைத்திருந்தார்கள்.**

## வேலை பெற்றுத் தருவதற்காக பணம் அறவிடப்படுதல் சட்ட விரோதமானதாகும்.

முகவர்கள் அல்லது வேலைக்கு அமர்துபவர்கள் உங்களிற்கு வீட்டுப் பராமரிப்பு வேலை பெற்றுத் தருவதற்காக உங்களிடம் பணம் அறவிடுவது என்பது சட்ட விரோதமானது ஆகும். அது மட்டுமல்லாமல் அந்த வேலை பெற்றத் தருவது சம்பந்தப்பட்ட ஏனைய சேவைகளிற்காக (உதாரணமாக தன்விபரக் கோவை ( Resume ) அல்லது குடிவரவு சேவைகள் என்பன) உங்களிடம் இருந்து பணம் அறவிடுவது என்பது சட்ட விரோதமானது ஆகும். அதே நேரத்தில் வீட்டுப் பணியாளராக உங்களை வேலைக்கு அமர்த்துவதற்காக உங்கள் முதலாளி உங்களிடமிருந்து பணம் அறவிடுவது சட்டவிரோதமானது. உங்கள் முதலாளி உங்களை வேலைக்கு அமர்த்துவதற்காக உங்களை வேலைக்கு அமர்த்திய முகவரிடம் கொடுத்த பணத்தை உங்களிடம் இருந்து அறவிட முடியாது.

## முதலாளியோ அல்லது உங்களை வேலைக்கு அமர்த்திய முகவரோ உங்களிடம் இருந்து உங்களது கடவுச் சீட்டையோ அல்லது உங்கள் சொத்தையோ முடக்க முடியாது.

வீட்டில் தங்கியிருந்து பணிபுரியும் வீட்டுப் பணியாளர்களின் சொத்துக்களை, உதாரணமாக கடவுச் சீட்டு, மருத்துவ அட்டைகள் என்பவற்றை உங்கள் முதலாளியோ அல்லது முகவரோ பறிமுதல் செய்வது என்பது சட்ட விரோதமானது ஆகும்.

## உங்களது உரிமையை நிலை நாட்டியதற்காக உங்களை தண்டனைக்கு உள்ளாக்க முடியாது. அப்படி உங்களை உங்களது முகவரோ அல்லது முதலாளியோ தண்டனைக்கு உள்ளாக்குவது என்பது சட்டவிரோதமாகும்.

வீட்டுப் பணியாளர்களது சொந்த உடமைகளை அவர்களை வேலைக்கு அமர்த்திய முதலாளியோ அல்லது முகவரோ சட்ட விரோதமான முறையில் முடக்கி வைத்தாலோ அல்லது சட்டவிரோதமான முறையில் பணம் அறவிட்டாலோ இதனை தொழில் அமைச்சில் நீங்கள் முறையிடலாம். இந்த சட்டத்தின் கீழ் நீங்கள் உங்கள் உரிமைகளை நிலை நாட்ட முற்பட்டதற்காகவோ அல்லது இது பற்றி முறையிட்டதற்காகவோ உங்களை உங்களது முதலாளியோ அல்லது முகவரோ தண்டனைக்குள்ளாக்குவது என்பது சட்டப்படி குற்றமாகும்.

# உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**வீட்டுப் பணியாளராக வேலை பெற்றுத் தருவதற்காக ஓர் முகவர் என்னிடம் இருந்து பணம் அறவிட்டுள்ளார். நான் இதற்கு என்ன செய்யலாம்?**

- ☐ இயன்றளவு ஆதாரங்களை சேமியுங்கள். இந்த முகவரிடம் இருந்து பெற்றுக் கொள்கின்ற சகல ஆவணங்களையும் உதாரணமாக எழுத்து மூல ஒப்புதல்கள் மற்றும் ஒப்பந்தங்கள் என்பவற்றை சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் பணம் செலுத்தியதற்கான ஆதாரங்களை, உதாரணமாக பணம் செலுத்திய காசோலையின் பிரதி, வங்கி ஆவணம் போன்றவற்றையும் சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள்.
- ☐ உங்களிற்கு தரப் படவேண்டிய நீங்கள் செலுத்திய பணத்தை உங்கள் முகவரிடம் திருப்பித் தரும்படி கடிதம் எழுதி கோருங்கள். அந்த முகவரிற்கு குறிப்பிட்ட திகதி ஒன்றை கூறி அதற்குள் செலுத்தும் படி கேளுங்கள். இந்த கடிதத்தை எப்படி எழுதுவது என்பது பற்றிய உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள அமைப்புக்களின் உதவியை நாடுங்கள்.
- ☐ தொழில் அமைச்சிடம் முறையிடுங்கள். நீங்கள் பணம் செலுத்தி 3.5 வருடங்களுக்குள் இந்த முறைப்பாட்டைச் தொழில் அமைச்சிடம் முறையிடலாம். இதற்கான உதவியை தொழில் அமைச்சின் தகவல் பெறும் இலக்கமாகிய 1-800-531-5551 என்ற இலக்கத்தில் அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**நான் இந்த முறைப்பாட்டை தற்பொழுது செய்வதற்கு விரும்பவில்லை. நிரந்தர வதிவிட உரிமை கோரி விண்ணப்பிப்பதற்கு தேவைப்படும் 24-மாத காலம் வரை காத்திருந்து விண்ணப்பித்த பின் இந்த முறைப்பாட்டைச் செய்யலாமா?**

- ☐ ஆம், நீங்கள் காத்திருக்கலாம். உங்களிடமிருந்த சட்டவிரோதமாக உங்கள் முகவரினால் அல்லது முதலாளியால் அறவிடப்பட்ட பணத்தை பெற்றுக் கொள்வதற்காக அவர்களிற்கு எதிராக தொழில் அமைச்சில் நீங்கள் 3.5 வருடங்களுக்குள் முறையிடலாம.
- ☐ உங்களது உரிமைகளைப் பற்றி பேசுவதனாலோ அல்லது இது பற்றி முறையிடுகின்ற காரணங்களினாலோ உங்களை உங்களது முதலாளி அல்லது முகவர் தண்டனைக்குள்ளாக்குவதோ அல்லது வேலை நீங்கம் செய்வதோ சட்ட விரோதமானது. ஆனால் அனேகமான தொழிலாளிகள் தங்கள் உரிமைகள் பற்றி பேசுகின்ற சந்தர்ப்பத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்கு உங்களிற்கு தற்பொழுது பாதுகாப்பு இல்லை என்று கருதினால் இது பற்றிய திட்டங்களை வகுப்பதற்குரிய உதவியைப் பெற்றுக் கொள்ளத் தொடங்குங்கள்.
- ☐ உங்களது சம்பளங்களோ அல்லது மேலதிக வேலை நேரத்திற்குரிய சம்பளங்களோ வழங்கப்படா விட்டால், இவை வழங்கப்படாத நாட்களில் இருந்து 6 மாதங்களிற்குள் பிறிதான ஒரு முறைப்பாட்டை தொழில் அமைச்சில் முறையிட வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள். உங்களிற்கு கிடைக்கப் படவேண்டிய சம்பளத் தொகைகளை கணிப்பதில் உதவி பெறுவதற்காகவும் திட்டங்களை வகுப்பதற்காகவும் தொழிலாளர் நடவடிக்கை நடவடிக்கை நிலையத்தை தொடர்பு கொள்ளுங்கள.

**என்னுடைய முதலாளி எனது கடவுச்சீட்டை பறிமுதல் செய்துள்ளார். நான் என்ன செய்யலாம்?**

- ☐ இது பற்றி திட்டமிடுவதற்குரிய உதவிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். இதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு அமைப்பை தொடர்பு கொள்ளுங்கள்..
- ☐ நீங்கள் பாதுகாப்பு என்று உணர்ந்தால், உங்களது கடவுச்சீட்டைத் தரும்படி உங்களது முதலாளியிடம் கேளுங்கள். இதனைத் தரும்படி கடிதம் ஒன்றின் மூலம் உங்களது முதலாளியிடம் கேளுங்கள். இக்கடிதத்தின் பிரதி ஒன்றை ஆதாராமாக உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள.
- ☐ தொழில் அமைச்சில் முறையிடுங்கள். இதற்கான உதவியை தொழில் அமைச்சின் தகவல் பெறும் இலக்கமாகிய 1-800-531-5551 என்ற இலக்கத்தில் அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம.

நீங்கள் ஏற்கனவே உங்கள் வேலையை விட்டு விலத்தியிருப்பின் தனியாக உங்கள் முதலாளியை அனுகி உங்கள் உடமைகளை பெற்றுக் கொள்வதை பாதுகாப்பு அற்றது என நீங்கள் உணர்ந்தால், இவற்றை பெற்றுக்கொள்வதற்கு உங்களது நண்பர்களையோ அல்லது உங்களிற்கு உதவி புரிபவர்களின் உதவியையோ நீங்கள் கோரலாம். இதற்காக உங்கள் நண்பர்கள் மற்றும் உதவியாளர்களுடன் மேலதிகமாக காவல்துறையின் உதவியையும் நாடலாம.

**நான் மார்ச் 22,2010 ற்கு முன்னர் ஒரு முகவரிடம் பணம் செலுத்தி விட்டேன். இந்தப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு எனக்கு ஏதேனும் உரிமைகள் இருக்கின்றதா?**

- ☐ துரதிஷ்டவசமாக இந்தப் புதிய சட்டப் பாதுகாப்பு மார்ச் 22,2010 லிருந்தே ஆரம்பிக்கின்றது. இதற்கு முந்தய திகதிகளில் வீட்டுப் பணியாளர்களிடமிருந்து அந்த தொழிலைப் பெற்றுக் கொடுப்பதற்கு முகவரோ அல்லது முதலாளியோ பணம் அறவிடுவது என்பது சட்டவிரோதமாக இருக்கவில்லை.
- ☐ கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் ஓர் அமைப்பை தொடர்பு கொள்ளுங்கள். நாங்களும் உங்களிற்கு இந்தப் பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு சில வேளைகளில் உதவக் கூடும.

## அழைக்க வேண்டிய அமைப்புக்களின் விபரம்.

**Workers' Action Centre**
416-531-0778 or www.workersactioncentre.org
சகல அழைப்புக்களும் இரகசியமாகப் பேணப்படும்.

**Caregivers' Action Centre**
cac_support@hotmail.com or call c/o WAC 416-531-0778

**Caregivers Connections Education & Support Organization**
(416) 656-5778 or caregiverconnections.tumblr.com

**Ministry of Labour**
Toll Free 1-800-531-5551 or www.labour.gov.on.ca

**416-531-0778 | info@workersactioncentre.org**

**www.workersactioncentre.org**

Funded by / Financée par Citizenship and Immigration Canada / Citoyenneté et Immigration Canada — Canada

மூலம்: தொழில் அமைச்சு ஒன்ராறியோ. இந்த பிரசுரம் பொதுவான தகவல்களை மட்டுமே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களிற்கு தொழில் அமைச்சை தொடர்பு கொள்ளவும

Live-in Caregivers - April 2010 - Tamil